1972 ஆகஸ்ட் 22]

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : தலைவர் அவர்களே, இதற்கு ஏதாவது காலம் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, காலம் குறிப்பிட்டுச் சொல்வது என்பது முடியாது. அது நம் கையில் இல்லை. கிசான் ராட்டைக்காக மத்திய அரசாங்கம் 20 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அவர்கள் சொல்லித்தான் இந்த டெக்ஸ்டுல் ராட்டைகள், அம்பர் ராட்டைகளை அதிகப்படுத்தியிருக்கிறோம். அவர்கள் பணம் கொடுத்திருக்கிறார்கள், அவர்கள் சொல்கின்றபடிதான் ஓரளவுக்கு அனுசரித்துப் போகும் நிலைமையில் நாம் இருக்கிறோம். விரைவில் அதற்கான தொழிற்சாலைகளை அமைத்திட சம்மதித்திருக்கிறார்கள். நமது அரசாங்கம் அதில் தக்க கவனம் செலுத்தி வருகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, கிசான் ராட்டையில் நூல் நூற்பதற்கு 66 காசு, அம்பர் ராட்டை, டெக்ஸ்டூர் ராட்டைகளில் நூற்பதற்கு ரூ. 1, ரூ. 2 என்று போடப்பட்டிருக்கிறது. அதனால் கிசான் ராட்டை வளர்ச்சி பெறுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, மத்திய அரசு அதைப்பற்றித் திட்டவட்டமாகக் கொள்கை அறிவித்திருக்கிறார்கள். இயந்திரத் திட்டம் கொஞ்சங்கொஞ்சமாக வளர்ந்து வந்தால், மற்றத் துணிகளோடு போட்டி போடும் நிலைமைக்கு இந்தத் திட்டத்தை வளர்க்க முடியும். அத்தருணத்தில் வருமானமும் பெருகுவதற்கான வழி செய்யப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, கதர் அணிய வேண்டும் என்று சொன்னவர்களே கதர் அணிவதை மிகவும் குறைத்திருக்கிறார்கள். அதனுல்தான் என்னவோ குறைந்திருக்கிறது. கதர் கட்டியவர்களும் குறைந்திருக்கிறார்கள். இந்தக் கருத்து உண்மைதானு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, புள்ளி விவரம் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்தால் எல்லா விவரங்களும் தெரியும்.

Tractor Training Centre

*202. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any tractor training centre is to be opened in this State ; and

(*b*) if so, the details thereof?

டிராக்டர் பயிற்சி நிலையம்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்த மாநிலத்தில் டிராக்டர் பயிற்சி நிலையம் ஏதும் தொடங்கப் படவிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இம்மாநிலத்தில் டிராக்டர் பயிற்சி நிலையம் ஒன்றைத் தொடங்குவது பற்றி மத்திய சர்க்காருடன் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது.

Tourist Development Corporation

* 203. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Tourist Development Corporation have arranged for any Musical and Classical Dance performances on fixed days in ten months for the benefit of Tourists in Madras; and

(b) if so, the details thereof ?

சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுற்றுலாப் பயணிகளின் பயனுக்காக 10 மாதங்களில், முடிவு செய்த சில நாட்களில் மட்டும் இசை நிகழ்ச்சி, கிராமிய நடனம் ஆகியவற்றைச் சென்னை மாநகரில் நடத்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.